OS: 739/2018

Date: 06.02.2024

பெயர் :காந்தா

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>- 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்

எனது தாத்தாவிற்கு சொந்தமான பூர்வீக சொத்தை எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே எனது சித்தப்பா, எனது அப்பா, எனது பெரியப்பாவிற்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாத்தா பாகம் பிரித்து கொடுக்கும்போது எனது தந்தையுடன் கீழே இருந்த கூரை வீட்டில் குடியிருந்தோம் என்றால் சரிதான். பாகம் பிரிந்தவுடன் நான் எனது தந்தை குடியிருந்த வீடானது எனது சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்டதால் நாங்கள் தனியாக வில்லை வீடு எனது தந்தை கட்டிக்கொண்டார் என்றால் சரிதான். எனது தாத்தா இருந்தபோது எனது அப்பாவுடன் எனது சித்தப்பா, பெரியப்பா செய்துகொண்ட பாகமானது பத்திரம் எதுவும் எழுதிகொள்ளவில்லை, வாய்மொழியாகத்தான் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தந்தை கட்டிய வீட்டில்தான் எனது தாயார் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். தற்போது எனது தந்தை கட்டிய வீட்டில் எனது தாயார் மட்டுமே குடியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அவ்வப்போது எனது தம்பி முத்தாகவுண்டர் வீட்டிற்கு வந்து செல்வார். மேற்படி முத்தாகவுண்டருக்கு சொத்தினை பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை எல்லோருக்கும் பொதுவாகத்தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்ததற்கு முன்பு சொத்துக்கள் எவ்வளவு உள்ளது என்றும், யார் யார் பெயரில் உள்ளது என்றும் வில்லங்கங்கள் உள்ளதா என தெரிந்துகொண்டேனா என்றால் சுமார் 3 ஏக்கர் நிலம் சொத்துக்கள் சேரும். பத்திரம் பட்டாவை பார்த்தேனா என்றால் இல்லை.

எனது தாயார் குடியிருக்கும் வீடானது யார் பெயரில் இருக்கிறது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஆனால் கூட்டாகத்தான் உள்ளது. எனது தந்தை குடியிருந்த வீட்டினை எனது தந்தை ஆறுமுகம், எனது தம்பி முத்தாகவுண்டர் அவரது பிள்ளைகள் ஆகியோர் சேர்ந்து மற்றொரு தம்பி ராஜாவின் மனைவி கோவிந்தம்மாளுக்கு ஒரு கிரய ஆவணம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாமலேயே செய்துள்ளார்கள். எனது தந்தை ஆறுமுகம் மற்றும் தம்பி ராஜா அவரது பிள்ளைகள் சேர்ந்து ராசாந்தி என்பருக்கு ஒரு கிரயமும், கோவிந்தன், அலமேலுவிற்கு மற்றொரு கிரயமும்

செய்துகொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி சொத்தில் மின்இணைப்புடன் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றின் மின்இணைப்பை நானும், எனது சகோதரியும் மற்ற சகோதரர்களுடன் சேர்ந்து எனது தம்பி ராஜா மனைவி கோவிந்தம்மாளுக்கு மின் இணைப்பை மாற்றி கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் வந்து தொளசம்பட்டி மின்சார வாரிய அலுவலகத்திற்கு வந்து கையெழுத்து செய்துகொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மெத்தை வீட்டில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் என்னுடன் பிறந்த அனைவருமே குடியிருந்து வருகிறார்கள் அந்த வீடு யார் கட்டினார்கள் என்றால் அனைவரும் சேர்ந்து தான் கட்டினார்கள். மேற்படி மெத்தை வீட்டினை சேட்டு தனியாக கட்டினார் என்றால் சரியல்ல.

விவசாய மகசூலை எனது தந்தை இருக்கும்போதும் அதற்கு பின்பும் அவ்வப்போது வந்து எங்களது பங்கை பெற்றுச்செல்வேன். விவசாயம் யார் செய்கிறார்கள் என்றால் நானும் அவ்வப்போது வந்து விவசாயம் செய்வேன். எனது தந்தை உயிருடன் இருந்தபோதே தாவா சொத்துக்கள் குறித்து பாகம் பிரித்துகொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல, எந்த பாகமும் பிரிக்கப்படவில்லை. பாகம் பிரிக்கப்பட்டதால்தான் எனது தந்தை உயிருடன் இருந்தபோது எனது சகோதரர்கள் தனித்தனியாக சொத்துக்களை விற்கும்போது அவர்களுடன் சேர்ந்து எனது தந்தையும் ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணமாகி சென்றுவிட்டதால் எனது தந்தை இருந்த காலத்திலேயே சொத்துக்கள் விற்பனை செய்தபோது என்னிடம் எந்த கையெழுத்தும் சட்டப்படி தேவையில்லை என்பதால் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவர்களாகவே எனக்கு தெரியாமல் மேற்படி சொத்துக்களை விற்பனை செய்தார்கள். வழக்கு போட்ட பின்பு எனது தாயார் குடியிருந்து வந்த வீடானது யார் பெயரில் வரி விதிப்புகள் உள்ளது, மின்இணைப்புகள் உள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனது தம்பிகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள். எனது தந்தை கைகாட்டிய இடத்தில் எனது சகோதரர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்தை பற்றியும், வழக்கு விவரங்கள் பற்றியும் எதுவும் தெரியாது என்றும், எனது தம்பி சேட்டு சொல்லிகொடுத்ததன் பேரிலும், அவரது தூண்டுதலின்பேரில் அவரது பேச்சை கேட்டுக்கொண்டு தாவா வழக்கினை போட்டுள்ளேன்

என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை காலத்திலேயே தாவா சொத்துக்கள் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**:- இல்லை.

ஒப்பம்/-PW1
ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.